www.Padasalai.Net www.CBSEtips.in

ரேஷ்மா. கே

Register No. 9229

9

# காலாண்டுத் தேர்வு – 2023

## தமிழ்

மணி : 2.30 மதிப்பெண்கள் : 100

### பகுதி – 1 (மதிப்பெண்கள் : 15)

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15

1. தமிழ்விடுதூது..........என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) தனிப்பாடல் இ) புதுக்கவிதை ஈ) சிற்றிலக்கியம்
2. நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது? அ) ஆறு ஆ) புலரி இ) இலஞ்சி ஈ) அகழி
3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச் சொற்கள் ஆ) உரிச்சொற்கள் இ) வடசொற்கள் ஈ) தொகைச் சொற்கள்
4. தீரா இடும்பை தருவது எது? அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம் இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை
5. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
   அ) ஊரகத் திறனறித் தேர்வு ஆ) தேசியத் திறனறித் தேர்வு இ) தேசியத் திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி
6. பொருந்தாத இணை எது? அ) திருவாரூர் – கரிக்கையூர் ஆ) ஏறுகோள் – எருதுகட்டி
   இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்
7. சேக்கிழார் இயற்றிய நூல் அ) கம்பராமாயணம் ஆ) பெரியபுராணம் இ) சிலப்பதிகாரம் ஈ) திருவிளையாடற்புராணம்
8. எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது......எனப்படும்.
   அ) பிறவினை ஆ) செய்வினை இ) தன்வினை ஈ) செயப்பாட்டு வினை
9. ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிட்டுள்ள சங்க இலக்கிய நூல்
   அ) சிலப்பதிகாரம் ஆ) கலித்தொகை இ) குறுந்தொகை ஈ) மணிமேகலை
10. மல்லல் மூதூர் வயவேந்த – இதில் "மல்லல்" என்னும் சொல்லின் பொருள் என்ன?
    அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய
11. <u>அழியா</u> வனப்பு, <u>ஒழியா</u> வனப்பு, சிந்தாமணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு
    அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஈ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்
துன்னும் மேதி படியத் துதைந்தெழும்
கன்னி வாளை கமுகின்மேற் பாய்வன
மன்னு வான்மிசை வானவில் போலுமால்

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது? அ) சிலப்பதிகாரம் ஆ) தமிழ்விடுதூது இ) புறநானூறு ஈ) பெரியபுராணம்
13. இப்பாடலின் ஆசிரியர் அ) சேக்கிழார் ஆ) குடபுலவியனார் இ) தொல்காப்பியர் ஈ) சீத்தலைச் சாத்தனார்
14. 'மேதி' – பொருள் தருக. அ) யானை ஆ) எருமை இ) சிங்கம் ஈ) பசு
15. இப்பாடலிலுள்ள அடி எதுகைகளை எழுதுக.
    அ) அன்னம் – ஆடும் ஆ) கன்னி – பாய்வன இ) அன்னம் – துன்னும் ஈ) கன்னி – வாளை

### பகுதி – 2 (மதிப்பெண்கள் : 18) பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. (21–ம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்) 4 x 2 = 8

16. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
17. உங்கள் பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
18. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
19. இணையவழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
20. பழமணல் மாற்றுமின் ; புதுமணல் பரப்புமின் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
21. 'மிகுதியான்' – எனத் தொடங்கும் குறட்பாவை அடி மாறாமல் எழுதுக.

#### பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5 x 2 = 10

22. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.
23. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க. அ) இளமையில் கல்வி..............ஆ) சித்திரமும் கைப்பழக்கம்......
24. பிழை நீக்கி எழுதுக.
    அ) சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்தி கொண்டுதான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டியது
    ஆ) மழையே பயிர்க்கூட்டமும், உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.
25. சொல்லுக்குள் சொல் தேடுக. அ) ஆற்றங்கரையோரம் – ஆ) எட்டுக்கால்பூச்சி –
26. பொருள் எழுதித் தொடரமைக்க அ) குளவி, குழவி – ஆ) வாளை, வாழை –
27. கலைச்சொற்கள் தருக. அ) Water Management – ஆ) Hero stone -
28. பகுபத உறுப்பிலக்கணம் தருக. நிறுத்தல் –

### பகுதி – 3 (மதிப்பெண்கள் : 18) பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி. 2 x 3 = 6

29. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?
30. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.
31. பின்வரும் பத்தியைப் படித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

தொடர்நிலைச் செய்யுள் வரிசையில் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் தமிழ் மக்களின் வாழ்வியலைச் சொல்லும் கருவூலங்களாகத் திகழ்கின்றன. மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால், இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

என்னும் வேறு பெயரும் உண்டு. மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார்.

அ) இரட்டைக் காப்பியங்கள் யாவை?

ஆ) மணிமேகலைக் காப்பியத்திற்கு வழங்கும் வேறு பெயர் யாது?

இ) மணிமேகலையை இயற்றியவர் யார்?

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி. (34–ம் வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)** 2 x 3 = 6

32. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
33. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?
34. தித்திக்கும் தெள்ளமுதாய்த் – எனத் தொடங்கும் தமிழ்விடுதூதுப் பாடலின் முதல் நான்கு அடிகளை அடிமாறாமல் எழுதுக. **(அல்லது)**
 'காடெல்லாம் கழைக்கரும்பு' – எனத் தொடங்கும் பெரிய புராணப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

பிரிவு – 3


**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2 x 3 = 6

35. தன்வினை, பிறவினை – எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.
36. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
37. பொருத்தமான துணை வினைகளைப் பயன்படுத்துக.
 அ) மனிதனையும் விலங்குகளையும்.........(வேறு) மொழியாகும்.
 ஆ) திராவிட மொழிகள் சில பொதுப்பண்புகளை............(பெறு)
 இ) காலந்தோறும் தன்னைப் .............(புதுப்பித்து) மொழி தமிழ்

பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5 x 5 = 25

38. தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக. **(அல்லது)**
 நீரின்றி அமையாது உலகு – என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.
39. உங்கள் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக. **(அல்லது)**
 விழாவில் கலந்துகொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.
40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. நயம் பாராட்டுக.

கல்லும் மலையும் குதித்துவந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன் ;
எல்லை விரிந்த சமவெளி – எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் – பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன் ;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் – மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.
– கவிமணி

42. அ) பள்ளியிலும் வீட்டிலும் நீ கடைப்பிடிக்கக்கூடிய நற்பண்புகள் சிலவற்றைப் பட்டியலிடுக. **(அல்லது)**
 **ஆ) பொன்மொழிகளை மொழிபெயர்க்க.**

1. A Nations culture resides in the hearts and in the soul of its people. - Mahatma Gandhi
2. The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru
3. The biggest problem is the lack of love and charity - Mother Teresa
4. You have to dream before your dreams can come true - A.P.J. Abdul Kalam
5. Winners don't do different things they do things differently. - Shiv Khera

பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3 x 8 = 24

43. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.
 **(அல்லது)**
 ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.
44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.
 **(அல்லது)**
 ஆ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரி.
45. அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.
 **(அல்லது)**
 ஆ) 'மழைநீர் சேகரிப்பு' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com